**மத்துகம பிரதேச சபைய - 2021**

------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்துகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மத்துகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.13 ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான வருமானக்கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த துடன் தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதன மாற்றங்க்ள கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய மிகையில் இனங்காணப்படாத மூலதன செலவினம் ரூபா 17,804,230 தொகை மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன செலவினமாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 3.16 ஆம் பிரிவின் பிரகாரம் அறிக்கையிடப்படுகின்ற காலப்பகுதியின் இறுதி திகதியில் உள்ளவாறு நிறுவனத்தில் காணப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள் | - மேற்படி - | |

| | | |
|---|---|---|
| யாவும் சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2002 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் இந்த பெறுமதி இனங்காணப்படாமல் சபையிலிருந்து அகற்றப்பட்ட தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்படாமல் சொத்துக்களின் பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) நியமத்தின் 3.26 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| • செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுப்பாய்ச்சல் கணிப்பிடும் போது ஆண்டில் வட்டி வருமானம் ரூபா 1,532,506 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அப்பெறுமதி ரூபா 2,738,431 ஆக காண்பிக்கப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவான காசுமீதி ரூபா 1,205,925 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| • மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் கணக்கு ரூபா 11,245,622 ஆக இருந்த போதும் அப்பெறுமதி ரூபா 26,960,859 ஆக காண்பிக்கப்பட்டமையால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வெளிச்சென்ற தேசிய காசுப் பாய்ச்சல் ரூபா 15,715,237 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| • மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற வட்டி வருமானம் ரூபா 1,532,506 முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் வட்டி வருமானமாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்படாமையால் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கிடைத்த வட்டி ரூபா 1,532,506 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| • ஆண்டில் கிடைத்த மூலதன செலவின மானியம் ரூபா 17,804,231 ஆக இருந்த போதும் அப்பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்படாமையால் நிதி செயற்பாடுகளின் கீழ் பெறுவனவுகள் அப்பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 03 நிழற்பட இயந்திரங்களை சேவிஸ் செய்வதற்காக ரூபா 59,870 செலவில் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அத்தொகையில் எதிர்வரும் ஆண்டிற்குரிய ரூபா 29,641 தொகை முற்கொடுப்பனவாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) 2020 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற மூலதன செலவின மானியம் ரூபா 81,276,398 தொகை, பயன்படுத்தி பெறப்பட்ட சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வு சதவீதத்திற்கு சமமான பெறுமதி ரூபா 8,128 மீளாய்வாண்டில் விரிவான | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | வருமானக் கூற்றில் வருமானத்தின் கீழ் மீண்டெழும் அல்லாத செலவினத்திற்காக அரசாங்கத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மாற்றல்களாக குறிப்பிடப்படாதிருந்தமையால் ஆண்டின் மிகை அப்பெறுமாத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் ஒட்டுமொத்த நிலுவை வருமானம் ரூபா 8,963,068 தொகை 2021 சனவரி 01 இல் உள்ளவாறு முன்கொண்டு செல்லும் போது ரூபா 8,660,801 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய ஆதனவரி ரூபா 302,267 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் புத்தகப் பெறுமதி ரூபா 100,000 ஆன பிற்பிட மயான நிலத்தில் சுடலைக்கூடம் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதி புத்தகங்களிலிருந்து அகற்றப்படாமல் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனங்கள், பொறிகளின் பெறுமதி ரூபா 100,000 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 100,000 பெறுமதியுடன் போரறகம பார்க் பொதுக் காணி ரூபா 2,000,000 ஆக கணக்கில் காண்பிக்கப்பட்டமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 1,900,000 ஆதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஊ) ஏனைய வருமானம் ரூபா 17,804,230 தொகை மற்றும் ஆண்டின் மிகை ரூபா 26.494,865 ஆனமையால் ஆண்டிற்கான விரிவான வருமானம் ரூபா 44,299,095 ஆக இருக்க வேண்டிய போதிலும் அப்பெறுமதி ரூபா 35,608,461 ஆக காண்பிக்கப்பட்டமையால் ஆண்டிற்கான விரிவான வருமானம் ரூபா 8,690,634 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு விகிதத்திற்கான விகிதத்தின் பிரகாரம் ஆண்டின் வருமானத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட வேண்டிய ரூபா 14,590,027 தொகை பெறுமானத்தேய்வு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 11 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதிக்கும் அதற்கு நேரொத்த அறிக்கைகளில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகளுக்கும் இடையே ரூபா 41,653,801 வேறுபாடு காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களின் மீதியும் பட்டோலைகளின் மீதியும் சமமாக இருத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 26,494,865 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 79,856,740 ஆகும்.

### 2.2. வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ஆதனவரி நிலுவை | 2022 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு நிலுவையில் | நிலுவை ஆதனவரி வருமானம் |

| | | |
|---|---|---|
| மீதியில் 01-03 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 4,290,926 தொகையும், 03-10 வருடங்களுக்கு இடையிலான காலம் முதல் அறவிட வேண்டிய ரூபா 1,563,774 தொகையும் காணப்பட்டது. | ரூபா 741,081 அறவிடப்பட்டுள்ளது. | விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சகைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) புத்தகப் பெறுமதி ரூபா 12,500,000 ஆன 12 ஏக்கர் 02 றூட் 36 பேர்ச் இனையுடைய பட்டமுல்லகந்த காணி 2012 ஆகஸ்ட் 21 ஆந் திகதி அளவிடல்களை மேற்கொள்ளும் போது அரசாங்க நிறுவனத்திலிருந்தும், விகாரையிலிருந்தும் மற்றும் வீட்டு உரிமையாளர்கள் மூவரிடமிருந்தும் 02 றூட் 12.72 பேர்ச் காணி அளவு கைப்பற்றப்பட்டிருந்தது. 04 வருடங்களுக்கு பின்னர் 2016 நவம்பர் மாதத்தின் போது அந்த கூறுகளை மீண்டும் சபைக்கு கையளிக்குமாறு அரசாங்க நிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கு அறிவித்தல் மாத்திரம் மேற்கொண்டிருந்த போதிலும் 2022 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணியை சபைக்கு கைப்பற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த காணியில் 12 ஏக்கர் 23 பேர்ச் அளவு சபையினால் பயன்படுத்தப்படாமல் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வனப்பூங்காவாக அபிவிருத்தி செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை முன்மொழிந்துள்ளது. | சபைக்கு சொந்தமான காணிகளின் உரித்தை உறுதிப்படுத்தி ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்தல் வேண்டும். |
| (ஆ) புத்தகப் பெறுமதி ரூபா 20,000,000 ஆன 07 ஏக்கர் 01 றூட் 11.4 பேர்ச் | களுத்துறை அரசாங்க அதிபரினால் 1962 இன் போது மத்துகம சிறிய | சபைக்குச் சொந்தமான காணிகளை |

| | | |
|---|---|---|
| அளவையுடைய மத்துகமவத்த காணியில் அனுமதியற்ற வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இந்த நிலத்தில் சபைக்கு எந்தவொரு கட்டணமும் செலுத்தாமல் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்திலிருந்து சபைக்கு வாடகை செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. கால்நடை வைத்திய அலுவலகமும் இந்த நிலத்திலேயே நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்திலிருந்தும் வாடகை அறவிடப்படாமை அவதானிக்கப்பட்டது. | நகர சபையாக கையளிக்கப்பட்ட காணியாகும். முன்னாள் அதன் சேவையாற்றியவருக்கு குடியிருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. 2003 முதல் 05 வருடங்களுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வாடகை செலுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் இல்லாதிருந்தமையும் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் காணிக்கூறை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | சரியாக இனங்கண்டு ஆவணங்களுக்கு கொண்டுவருதல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 08 பேர்ச் காணியின் 04 கூறுகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சபைக்குச் சொந்தமான காணிகள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |